IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC.6/2022 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw6 |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : அறிவுகண்ணு |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.12.2022

நான் தற்பொழுது விஸ்வநத்தம் கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். நான் பயர் ஆபிசில் வேலை செய்து வருகிறேன். 1வது எதிரி முகேந்திரசாய்ராமை தெரியும் மற்ற எதிரிகளையும் தெரியும். அ.சா.1 எனது அண்ணன் மகன் ஆவார். 1வது எதிரிக்கும், அ.சா.1 க்கும் வெற்றிலைஊரணி கிராமத்தில் வைத்து திருமணம் நடைபெற்றது. பின்னர் வெற்றிலைஊரணியில் குடியிருந்து வந்தார்கள். 1வது எதிரிக்கு 2வது திருமணம் இன்னொரு பெண்ணோடு திருமணம் நடந்தது. நாங்கள் துஸ்டி வீட்டிற்கு வெற்றிலைஊரணிக்கு சென்றிருந்தோம். 2,3 வருடத்திற்கு

முன்பு சென்றிருந்தோம்.அப்போது சாய்ராம் வீட்டில் கூட்டமாக இருந்தது. கல்யாணம் நடந்ததாக சொன்னார்கள். நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். அவ்வளவுதான்.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

கடந்த 6.6.2019ம் தேதி 1வது எதிரிக்கும் வழக்கின் 7ம் எதிரிக்கும் நடந்த 2வது திருமணத்தை நான் அ.சா.1 டம் சொன்னேன் என்றால் சரியல்ல. அ.சா.1 இதுசம்பந்தமாக எதிரிகளின் வீட்டிற்கு சென்று கேட்டபோது எதிரிகள் அசிங்கமாக பேசி 50 பவுன் நகைகள், 5 லட்சம் தராததால் தான் 2வது திருமணம் செய்துவிட்டேன் என்று 1வது எதிரி சொன்னார் என்றும், இதற்கு மற்ற எதிரிகள் தூண்டுதலாக இருந்தார்கள் என்றும், சம்பவத்தை நான் தெரிந்து கொண்டு தற்போது ஏதோ ஒரு காணத்திற்காகவும் மறதியின் காரணமாகவும் தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

1 முதல் 6 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

வெற்றிலைஊரணி கிராமத்திற்கு எந்த நாள் தேதி வருடத்தில் இறப்புக்கு (துஸ்டி) சென்றேன் என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் முடியாது. இறந்தது யார் என்று ஞாபகம் உள்ளதா என்றால் சொந்தகாரர் சித்தப்பா ரெங்கசாமி ஆவார். அ.சா.1 எனது உடன்பிறந்த சகோதரர் முருகேசனின் மகள் என்றால் சரிதான். அவர்கள் குடும்பத்தில் நடக்கும் பிரச்சினை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். நாங்கள் விஸ்வநத்தத்தில் இருக்கிறோம். 1வது எதிரிக்கு திருமணம் நடந்ததாகவும் நடக்கிறது என்றோ யார் சொன்னார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது கூட்டமாக இருந்தது. அ.சா.1 எனது உடன்பிறந்த சகோதரரின் மகள் என்பதால் அவருக்கு அனுசரணையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கேள்விபட்டதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

7 முதல் 9 எதிரிகள் தரப்பில் 1 முதல் 6 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி.சாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

மறுவிசாரணை – இல்லை.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC. 6/2022 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw7 |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : **வேண்டாராஜா** |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.12.2022

நான் தற்பொழுது விருதுநகர் அருகே பாவாலி என்ற கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் ஜோதிடம் சொல்லும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது அக்கா மகள். 1வது எதிரி மற்றும் மற்ற அனைத்து எதிரிகளையும் தெரியும். 6.6.2019 ம் தேதி வெற்றிலைஊரணியில் எனது தாய்மாமானார் ரெங்கசாமி இறந்துவிட்டார். அந்த துக்க நிகழ்ச்சிக்காக நான் வெற்றிலைஊரணி சென்றிருந்தேன். நான் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தேன் சாய்ராமின் வீடு மெயின் ரோட்டில் உள்ளது. காலை 10.30 மணி இருக்கும். அப்போது அவருடைய வீட்டில் திருமண வீடு போல்

கூட்டமாக இருந்தது. பட்டுவேட்டி பட்டு சட்டையில் சாய்ராம் மற்றும் அவரது குடும்பத்தினர் இருந்தனர். கல்யாண பொண்ணு போல் ஒரு பெண் அலங்காரத்தில் சேரில் உட்கார்ந்து இருந்தார். நான் அதனை பார்த்து துக்க நிகழ்ச்சிக்கு சென்று விட்டேன். பின்னர் துக்கநிகழ்ச்சி வீட்டின் வெளியே நான் உட்கார்ந்து இருந்தபோது சாய்ராம் பூகட்டுகிற வீட்டில் ஒரு பொண்ணை கல்யாணம் பண்ணிவிட்டார் என்று பேசிக்கொண்டிருந்தார். பின்னர் அவர்கள் சொல்வதை வைத்து நான் சாய்ராமின் மனைவியான அ.சா.1 ற்கு போன் செய்து சாய்ராம் 2 வது கல்யாணம் செய்து விட்டதாக பேசிக் கொள்கிறார்கள் என்றும், அவருடைய வீட்டிலும் திருமணம் வீடு மாதிரி இருக்கிறது நான் பார்த்துவிட்டு வந்தேன் என்று சொன்னேன். நீங்கள் எல்லோரும் பிரிவினையாகி இருப்பதால் டைவர்ஸ் ஆகிவிட்டதா என்று கேட்டேன். டைவர்ஸ் ஆகவில்லை என்று அ.சா.1 ம் என்னிடம் சொன்னார். மறுபடி அ.சா.1 என்னிடம் கேட்டார் நான் இதே தகவலை சொன்னேன். அ.சா.1 ஐ பார்த்து சொன்னேன். மறுநாள் அ.சா.1 சென்னையில் இருந்து 7 ம் தேதி கிழம்பி வந்து 8 ம் தேதி வெற்றிலைஊரணிக்கு வந்துள்ளார். மறுநாள் 9 ம் தேதி என்னை பார்த்து சாய்ராமின் வீடு பூட்டியிருப்பதாக சொன்னார். பின்னர் 9 ம் தேதி காலை 10.30 மணிக்கு எனக்கு அ.சா.1 போன் செய்து வெற்றிலைஊரணிக்கு வரச்சொன்னார். நான் பஸ்ஸில் வந்து 12.45 மணிக்கு வெற்றிலைஊரணியில் இறங்கினேன். அன்று சாய்ராமின் வீட்டில் கூட்டமாக இருந்தது. எனது தம்பி பாலசுப்பிரமணியன், சுலோசனாவின் மகன் அபிஷேக் ஆகிய மூன்று பேரையும் எனது தம்பி கையை பிடித்து இழுத்துகொண்டு வந்தார். ஸ்கார்பியோ காரில் சுலோசனாவை அவரது மகனையும் ஏற்றினார். நானும் கூட வந்தேன். நான் அ.சா.1 டம் நான் என்ன நடந்தது என்று கேட்டபோது சாய்ராம் அவரது குடும்பத்தினர் தகாத அசிங்கமான வார்த்தையால் பேசி அடிக்க வந்ததாக சொன்னார். பின்னர் சாத்தூர் மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார். நான் போலிசாரிடம் இதையே சொன்னேன்.

1 முதல் 6 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

நான் அ.சா.1 க்கு தாய்மாமா என்றால் சரிதான். எனது மனைவியின் பெயர் என்ன என்றால் காளீஸ்வரி. எனது மனைவி காளீஸ்வரியை நான் கொலை செய்ததாக என் மீது கொலை வழக்கு பதிவுசெய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டதா என்றால்

விசாரணை நடைபெற்றது. விசாரணை நீதிமன்றத்தில் தண்டனை ஆகி மாண்பமை உயர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டேன். என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்ததால் அமர்வு நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்திற்கு சென்றுள்ளதால் நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் தெரியாது. போலிசார் விசாரணையில் எனது மாமனார் இறப்பிற்கு விருதுநகரில் இருந்து வெற்றிலைஊரணிக்கு இருசக்கர வாகனத்தில் வந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் நான் போலிசாரிடம் சொல்லவில்லை. போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் 10 ம் தேதி 6 வது மாதம் மதியம் 12.00 மணிக்கு மகளிர் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். போலிசார் விசாரணையில் வெற்றிலைஊரணி கிராமத்தில் இருந்து சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு ஸ்கார்பியோ காரில் நான், அ.சா.1, தம்பி பாலசுப்பிரமணியன் ஆகியோர் சென்றதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லி'யுள்ளேன். வேறுயாராவது வந்தார்களா என்றால் இல்லை. அசா.1 கொடுத்த புகார் மனுவில் நான் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. அனைத்து மகளிர் நிலைய காவலத்துறையினர் என்னை காவல்நிலையத்தில் வைத்து விசாரணை செய்தபின்னர் வேறு எங்கும் வைத்து விசாரணை செய்யவில்லை எனறால் சரிதான். வெற்றிலைஊரணி கிராமத்தில் இருநத சாத்தூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்திற்கு ஸ்கார்பியோ காரில் வந்தபோதுதான் அ.சா.1 சண்டை பற்றி சொன்னார் என்றால் சண்டை நடந்தது பற்றி சொன்னார் யார் யார் அடிக்க வந்தார்கள் என்பது பற்றியும், சாய்ராம் குடும்பத்தினர் வந்ததாக சொன்னார். இதற்கு முன்பு அ.சா.1 க்கும், ஆஜர் எதிரிகளான 1 முதல் 6 எதிரிகளுக்கும் இடையில் வரதட்சனை வழக்கு நடைபெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் எனது அண்ணன் முருகேசன் சாட்சியாக இருந்தார் என்றால் வழக்கு விவரம் தெரியும் யார் சாட்சி என்று தெரியாது. அந்த வழக்கு விடுதலை யான விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.1 மற்றும் 1 வது எதிரிக்கு இடையில் நடை பெற்ற திருமணத்தை மாண்பமை சிவகாசி சாா்பு நீதிமன்றம் விவகாரத்து வழங்கி உத்திரவிட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் வழக்கு விவரம் தெரியும் ஆனால் விவாகரத்து ஆனதா என்று தெரியாது. அ.சா.1, 1ம் எதிரிக்கு இடையில் நடந்த திருமணத்தை எனது அண்ணன் முத்துசாமி முன்னின்று நடத்தி

வைத்தார் என்றால் சரிதான். சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு நாங்கள் வெற்றிலைஊரணி கிராமத்தில் இருந்து வந்த போது அ.சா.1 மற்றும் 1ம் எதிரிக்கு திருமணத்தை முன்னின்று நடத்தி வைத்த அ.சா.1ன் தாய்மாமாவான முத்துசாமி மற்றும் அ.சா.1ன் சகோதரரோ மேற்படி காவல் நிலையத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். அவர்கள் சென்னையில் இருந்தார்கள். அவர்கள் சென்னையில் இருந்து வந்த பின்பும் இந்த விவகாரத்தில் அவர்கள் தலையிட வில்லை என்றால் அதுபற்றி தெரியாது. அ.சா.1 மற்றும் 1ம் எதிரிக்கு இடையிலான மூலபிரச்சினை என்னவென்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது அ.சா.1ன் நடவடிக்கை சரியில்லாத காரணத்தினால் தான் அ.சா.1ன் பெற்றோர்களோ, அ.சா.1ன் தாய்மாமா முத்துசாமியோ. அ.சா.1ன் சகோதரரோ இந்த விவகாரத்தில் தலையிடவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அ.சா.1ன் பெற்றோர்களோ. அ.சா.1ன் தாய்மாமாவோ. அ.சா.1ன் சகோதரரோ சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிரி வீட்டில் 1ம் எதிரி பட்டு வேஸடடியிலும் மற்றொரு பெண் பட்டு சேலையில் திருமண வீடுபோல் இருந்ததை வைத்துதான் நான் திருமணம் நடந்ததாக முடிவுக்கு வந்தேன் என்றால் அங்கு இங்கு இருந்ததை வைத்தும் துஸ்டி வீட்டில் கேட்டு தெரிந்து தான் அ.சா1க்கு தகவல் தெரிவித்தேன்.துஸ்டி வீட்டில் யார் யாரிடம் விசாரித்தேன் என்றால் அங்கு பேசிக்கொண்டிருந்ததை வைத்து தெரிந்து கொண்டேன். யார் பேசினார்கள் என்ற விவரம் தெரியாது. ஊரில் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். போலிசார் விசாரணையில் 7வது எதிரி யார் என்றோ யாருக்கு யாருடன் திருமணம் நடைபெற்றது என்பது குறித்தோ அவரது பெற்றோர் யார் என்பது குறித்தோ நான் தகவல் தெரிவிக்கவில்லை என்றாலும் சரிதான். நான் கேள்விபட்டதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. 1 முதல் 6 எதிரகளும் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். எனது இருசக்கர வாகனத்தை நிறுத்தி எதிரிகளிடம் என்னவென்று விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நான் துஸ்டி வீட்டிற்கு சென்று கொண்டிருந்தேன். நான் அ.சா.1க்கு தாய் மாமா என்பதால் அ.சா.1க்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7 முதல் 9 எதிரிகள் தரப்பில் 1 முதல் 6 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி.சாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

மறுவிசாரணை – இல்லை.